உ

கடவுள் துணை.

பாவலர்கள்பாடியருளிய

# சீட்டுக்கவித்திரட்டு.

இஃது

தண்ணீர்க்குளம்,

குப்பவிஜயங்காரரால்

பார்வையிடப்பட்டு

வளவனூர்

முத்துசாமிமுதலியா

ரவர்களது

முத்தமிழ்விளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

ஸௌத்திரி ஹூ - ஆவணிமீ

உ

கடவுள் துணை.

# சீட்டுக்கவித்திரட்டு.

சோடசாவதானி

# சரவணப்பெருமாள்

கவிராயர்பாடியவை.

மரபுதவிராதவன் சோமசுந்தரகுரு மலர்
ப்பதம்பரவு தாசன் - வண்டமிழ்ச் சரவணப்
பெருமாள் கவிச்சக்ர வர்த்திதேர்ந் தெழுதுநீ
ருபம் - வளர்காளையம்பதியின் மேவு துரைலக்ஷ்
மணமந்திரியெதிர் கொண்டுகாண்க - பாவாண
ருக்குபகாரி நீயானையாலெமது வல்லமையுமகி
மையுங்கேள்- கருணீகர்நால்வர்க்கு நாற்கவிதை
சொல்லவாய் கனவேலுமயிலுமென்னக் - காலி
லொருகவிதையுயர் தோளிலொரு கவிதையிரு
கையிலொரு கவிதை யெழுதக் - கணக்கொரு
புறஞ்சொல விலக்கொருபுறஞ்சொலக் காணுத
திரைமறைவில்லை - கனசூதுசதுரங்க மொடுகுதி
ரை யடிசொலக் கன்னெல்லு முதுகிலெண்ணப்
பரிவுபெற்றப்புதுச் சேரியிற்சென்றினிய பண்
பரிற்சினேயவாத்தி - பண்புளகுமாரபாரதிமதுர
கவிவீர பத்ரகவிகொண்டாடவே - பாக்கியபூ
னந்தநா தன்சபையிலுஞ்செய்து பல்லக்கு வரி
சைபெற்றேன்- பலகாவியங்களுந்தெரிவேனள
ப்பரியபஞ்சலக்ஷணமுமறிவேன் - அரசிலுயர்

நீதநுரை யாரெனிற்சேதுபதி யாகுமவன்மணி வாயிலில் - அகஸ்தியமுனிக்குமதி கங்கற்றபேர் களாயிரங்கவிவாணருனே - டவரிலொருசிறுவன் யான் பாடவறியே னென் றகற்றிவிட்டார்களெ ன்னை- ஆதலாற்பூமியிற்சஞ்சரித்தேனின்னகந்த ணின்மகிழ்ந்தருள்வையே ... ... ... (க)

கல்விச்சமுத்திரங் கமலாலயந்தமிழ்க் கடன் மடைதிறந்தவெள்ளம் - கற்பனைபிறப்பிடங்கலை மகளிருப்பிடங் கவிமாரிபொழிபுமேகம்- சொ ல்விற்பனம்விளையு மதுரக்களஞ்சியந் தோன்று கர்ப்பூரதீபம்-சுகிர்தகுணவவதானிசரவணப்பெ ருமாள்கை தொட்டெழுதிவிட்டசனது- வில்லு க்கருச்சுனன் சொல்லுக்கரிச்சந்த்ரன் வெற்றிக்கு விக்ரமார்க்கன்-வித்தைக்ககஸ்தியன்முத்துக்கறு ப்பண விலக்ஷணனெதிர்ந்துகாண்க - மல்வெற் றியாயென்று தாயென்று நீயென்று மாலென்று வேலென்றுகா- மாவென்றுகாவென்றுநாவொன் று பாவொன்றுவருகின்றதருள்புரிகவே ..(உ)

எவ்வனமனேன்மணி பதம்பணிகொள்சேது பதியின்றவன்மணிவாசன்மணிவாய் - இலகுபணி சைவமணி சோமசுந்தரகுருவெனயன்மகிழ்கிந் தாமணி-செவ்வசன மொழிதமிழ்ச்சரவணப்பெ ருமாள்சிரோன்மணியனுப்புமோலை - மிசய்பதி

ருமலைராயன் பட்டணத்தவரெலாஞ் சிரசுமேற்
கொண்டுகாண்க - இவ்வூரில்வந்துதிரு மலைராய
னைப்போற்றி யிலகுகவிகாளமேகம்- எமகண்ட
மொருதினுசு பாடிஞாலமுமிங்கொட்டுவகைபா
டுவோம்- ஒவ்விதையறிந்துகனதனவரிசையுதவி
னாலுமதுகுடிவாழிவாழி உதவாதிருப்பிரெனிலு
மதுபட்டணமின்னமொருமிக்கமண்மாரியே ()

அவ்வொன்று மவதானி தமிழொன்றுவெகு
மானியறிவொன்றுசேதுபதிபால்- அணியொன்
றுவெகுமானி சோமசுந்தரகுருவி னருளொன்
றுமடிமைவெள்ளைக்- கவ்வொன்றுடலைநாவ னதி
யொன்றுகோத்திரன் கணியொன்று குவளைமார்
பன்- கதியொன்று சரவணப்பெருமாள்கவீசுர
ன் கையொன்று மெழுதுமோலை - தெவ்வென்
று சமர்வென்ற திகழ்மகம்மதுதம்பிதீரனெதிர்
கொண்டுகாண்க - செழுஞ்சென்னபட்டணமதி
ற்கேகுவோம் வழிச்செலவுக்கு வேண்டுமதனால்-
உவ்வொன்றுபவ்வொன்றுலவ்வொன்று டவ்வொ
ன்றுசவ்வொன்று மவ்வொன்றுவவ் - வொன்றுர
வ்வொன்றுரவ்வொன்றுகவ் வொன்றுனவ்வொன்
றுவரவிடல்வேண்டுமே ... ... ... ... (௪)

பைங்குவளைமார்பனெடு வையைவளநாடனு
யர் பார்த்திவர்கள்புகழ்நலூரன்- பாக்கியநதிகு

லதிலகன் யோக்கியபர மேழிப் பதாகையன் பூ
மிபாலன்-மங்கலக்கவிராஜன் வித்வஜனசேகரன்
மணத்தமிழ்சம்ப்ரதாயன் - வஜ்ரதேகன்பத்மநா
பன்வேலாயுதமகாமந்திரிகுருபுத்திரன் - துங்க
மிகுசேதுபதி மகிழ்நேசன்சோமசுந்தரசுவாமி
தாசன்-சோடசவவதானசரவணப்பெருமாள்சுய
ம்ப்ரகாசன்கையோலை பொங்கிவளர்செல்வச்செ
ழுஞ்சென்னபட்டணப்பொன்னகர்த்தெளியசி
ங்க-பூபவெதிர்வந்துகண்டுன்சபையிலவதானபு
னிதமறிவுறல்வேண்டுமே ... ... ...(௫)

நாவலவருக்குளொரு நடுநாயகப்புவியில் ரா
ஜராஜர்க்குமகுடம் - நவிகுலவரோதபஞ்சகலக
ல்ஞாபகமெநாளும்வித்தியாடம்பரம் - புவியில்
விலை மதியாதமாணிக்கமவதான புனிதமாற்றே
ங்குதங்கம் - புகழுமனுவிக்கியானநாற்கவிவிலா
சமெய்ப்புத்தமுதடைத்தகும்பம்-மாவளமிகுங்
கொலுச்சேதுபதிவாசலில்வயங்குகர்ப்பூரதீபம்
வளர்தமிழ்ச்சோமசுந்தரகுருபதத்தின்மாமலர
ருச்சனைசெய்யன்பன்-மேவுபுகழ்சரவணப்பெ
ருமாள்கையோலைஜெயவீரபாண்டியஉதார - வி
ருதரசகட்டபொம் மேந்த்ரதுரை யெதிர்கொ
ண்டுவெகுவரிசைவரவிடுகவே ... ...(௬)

வார்பெருகு கலசமுலை யார்மதன் சேதுபதி

வாசத்ப்ரசண்டவாக்கி - வடிதமிழ்க்கும்பன் சுவா
மிநாதன் றுணைவன் வளர்நெல்லையப் பன்மைந்த
ன்-பார்பெறுங்குண ஞானசோமசுந்தரகுருபதா
ம்புயம்பரவுதாசன் - பைந்தமிழிலக்கணவிலக்கி
யக்கடலுண்டுபாரொலாம்பொழியுமேகம்- கார்
பெறுங்கையனுயர் சரவணப் பெருமாள்கனித்
தெழுதுகின்றவோலை-கதிகொணவகிரியில்வரகு
ணராம செந்தொட்டி காளையெதிர்கொண்டுகா
ண்க-சீர்பெறுபணென்றக்ஷரங்கோடி பொன்
பெறச்செய்துனைத்தேடிவந்தோம்- திண்புயம
திற்புனைந்தென்றனை யனுப்பிடிற்செகமெலாங்
கொண்டாடுமே ... ... ... ... ...(எ)

பனகசயனத்தன்ப்ரசித்தன்மகிமைச்சேதுப
திமகிழ் தமிப்ரசங்கன் - பைந்தமி ழகஸ்தியன்
சோமசுந்தரகுரு பதாம்புயம் பரவுமுரவோன்-
பாரகாவியமதொடுலக்ஷாதிலக்ஷப்ரபந்தமொரு
நாழிகையிலே-பாடியெவருக்கு மரிதானவவதா
னம்பக்குவமுயர்சம்ப்ரதாயன்-தனகனகவாகன
விசேஷதசர்வக்யான சாம்பிராச்சியசார்வபூமன்-
சற்புத்திர சன்மார்க்க சத்ப்ரபல சத்குகிர்தசத்சி
நேகப்ரதாபன்- சகலகுண சம்பனசிரோரத்நமு
க்கியபுனிதப்ரதானச்சிரேஷ்டன் -சரவணப்பெ
ருமாள் கவிச்சரபமெனு ஞான ஜகதென்மூதுங்

ஜாகிதம்-குனிவில்மகதத்தர்வட கத்தர்நிடதத்தர்
குடகத்தர்முனைமக்கர்மச்சர்-கொச்சியகுலத்தர்
குளுவத்தர்துளுவத்தர் சகுதத்தர்மிதுலைக்குளர
சர்-கொங்கணர் கவுந்தியர் தெலுங்கரொடுடங்க
ணர்குலிங்கரடல் சிந்துமகிபர் கொங்கர்சிலவங்
கர்பலகங்கர்செறியங்கரணிகொண்டுநிலைநின்று
பணிபக்-கனதைபெறும்அஜரதுநபாபுபாலாஜா
கருணையா யுதவுமினிய- கனியுமுமுதத்துலுமு
ருபாதர் மகராஜகாவலனெதிர்ந்துகாண்க- கட
லெலாஞ்சூழ்ந்திடு புவிச்சக்கரவர்த்திநீகவிச்சக்
ரவர்த்திபாமே-கண்டாய்சொலவதானமுறைபா
ர்க்கிலுன்புகழ்கதிக்குமுலகுளமட்டுமே (அ)

வண்ணப்ர பந்தத்துமுத்தமிழ்ப்பாமும்மத
த்தைக் கரத்தொழுக்கி - வறப்பினும் வளந்தரு
பொருப்பெபாப் பெனச்சித்ர வாய்விட்ட தட்டி
வேட்டு- மதுரகவளத்தைத் திரட்டித் திரட்டிச்
செவ் வாய்மடுத் துண்டுகோட்டு- வப்பெழுத்தா
ணிகொண்டூற்றெழுகல்விக்கடல் வயங்குப்ரளய
த்தின்மூழ்கி-அண்ணவரு வெவ்வினைக்கொப்பற்
றையெற்றிநாலடிகொண்ட பண்ணடத்தி-அழகி
யநனூற்பணிக் கச்சமிட் டெக்களித் தாக்ரமித்
துக்ரமுற்றி - அஷ்டாவதானமெனு முன்மத்த
மேறியறி யாமைதிகளந் தறித்தே- ஆறுந்துதிக்
கைபெற்றுக்கட்கடைப்பொறியனற்பிறக்கச்சி

ணத்தே-பண்ணாசெனத்திறை கொடாமனவுஞ்
த்தப்பசாசனாவளைந்துகொண்டே - பழமொழி
யிருப்புலக்கைப்படையினுற்சிதறுபஞ்சுபஞ்சா
வடித்துப் பரகுருவெனும்பாக னடிமலர்சுமந்
தவன்பணிமலர்த்தோட்டி நனியாற் பரிவுடன்வ
ணங்கிடுஞ் சரவணப்பெருமாள் பருஉக்களிற்ற
னுப்புமோலை-தண்ணமிர்தவாரியுயர்செல்லைபம்
பதியரசுசங்கநிதிசேதுபதிவா-சன்மார்க்கன்மக
ன்மகன் றலைமுறைகளாகப்ரதானியாம்யூகிமந்தி
ரி- தந்த்ரமுத்தளகுமருமகனைமுத்தளகுசாமி
யெதிர் கொண்டுகொண்டு- சார்பான தூதொன்று
பாடிவந்தனமுனதுதயவுகூர்ந்தருள்புரிவையே

தொடையெலாந் திரிபுசொற் பொருளெலா
ங் கற்பனையெ துகையெலா மாலைமாற்று- சொ
ல்லெல்லாமதுரம்வெண் பாவெலாங்கனதகலித்து
றையெலாமேகபாதந்- தூதெலாஞ் சந்தமுஞ் ச
ரியெலாங் கௌட்மாசுகளெலாந் தனிநிரோஷ்ட
ம்- சுயமெலா நிமிஷிமெய்க்கணமெலாங்கணம்
வணத்துறையெலா நாகபந்தம்அடையெலாஞ்சி
வசரிதை சிந்தெலா நீதிகொச்ச சகமெலாமடிமட
க்கவ் - வடியெலாமேமகமுயர்பதமெலாங்கட்டு
நாடகமெலா நவசித்திரம்- அசையெலாமிருபொ
ருள்சொலாவெலாம்வேதமக்ஷரமெலாமுயிர்மல

கிதம் - அளவெலாந் தராசுநிறை முடிவெலாம் பொருளாவனைத்தெலாம் பாடுகவிஞன் - பெடையெலாஞ்சேரனப் புடையெலாஞ் செறிவயற்பெருநெலாந்தேனை முல்லைப்-பிணையெலாஞ் சேதுபதி புகழெலாம்போற்றிவருபெட்பெலாந்திகழ்சிலாக்பன் - பெருநலாஞ்சோமசுந்தரகுரு பதத்தைப் பிறப்பெலாம் போற்றுமடிமை-பேச்செலாமமுதமொழி யாச்சொலுஞ்சரவணப்பெருமாள்விடுங்காகிதம் - படையெலாங்கொண்டுபொரு பதையெலாம்வென்று நற் பண்பெலாமறியுநிபுணன்-பாரெலாம்போற்றவரு சரவணப் பூபனெதிர் பண்பெலாங் கொண்டுகாண்க - பலனெலாம் பல்நெலா நலனெலாங்கலமெலாம்பரியெலாங்கரியெலாம்பொற்- பணியெலாமணியெலாந் துகிலெலா நெல்லெலாம்பணமெலாந்தரல் வேண்டுமே.... .... ... ... (ய)

தண்ணமுதசாகரங்கவிதாப்ரசங்கத் தமிழ்க்கடலையுண்டமேகம் - சற்குணவிலாசமெய்க்கவிராஜசிங்கம்வெண்டாமணாமடந்தைவாசம்வண்ணப்ப்ரபந்தத்துமும்மதக்குஞ்சர மணைத்தஷ்டாவதானம் - வாசாம கோசரங் கவிப்பரவாசத்தெய்வச்செயலவரப்ரசாதம் - கண்ணிலவுமுல்லைபணிசேதுபதி வாசலிற் கனகாபிஷேகயோகம் - கற்றவர்கள்கொண்டாடும் சரவணப்பெருமா

ள்கவிச்சக்ரவர்த்திபோலே - பண்ணுலவுசிவகங்கைபம்பதிப்பேட்டையிற்பலரெதிர் நடந்துகாண்க - பரிவுறுபுராதன மிவ் வூரொன்றுவந்தனம் பணந்திரள்வரவிடுகவே ... ... ... ... (௰௧)

மாதுபதி தாதுபதியாதுபதிசேதுபதிவாசந்கவிப்ரசங்கன் - மங்களாகரபுஞ்சநாற்கவிகணிறைகும்பமதுரப்ர பந்தமேகம் - வடிதமிழ்க்குஞ்சரங் கவிராசசிங்க மது ராகமவதானசரபம் - வண்ணக்களஞ்சியஞ் சிந்துச்சமுத்திர மணக்தந்தமிழ்ப்பொக்கிஷம் - சோதிப்பிரகாசம் சிலாக்கியசத்பாத்திரன் சுகிர்தசற்சைவதுல்யம் - சுகதிகசுஜாதிகசுதாகர சுபாகமசுபாகசற் புருஷரத்நம் - சுதந்தரசுமங்கல சுரஞ்சிதசுமந்திர சுயம்ப்ரகாசப்ரதாபம் - சுபத்திரசுலக்ஷண சுகற்புதசுகாற்சன சுகப்ரபலரத்நாகரம் - காதல்செய்சிவக்கியான விற்பன தடாகஞ்சகலகலைக்கியானபீடம் - கல்விப்ரவாகம்வித்யாடம்பரந்தமிழ்க் கடன்மடை திறந்தவெள்ளம் - கனசபாபூஷணஞ் சோமசுந்தரகுருகடாக்ஷவீக்ஷண விலாசன் - கங்கைகுலதிலகனுஞ்சரவணப்பெருமாள் கவிச்சக்ரவர்த்திபோலே - ஆதிகேரளராம வண்மைமகராஜனேழடியெதிர் நடந்தாண்க - அஜரதுநபாபுசரி பேட்டிபெற்றேமியா மறியாதமேதசமில்லை - அரிய தென்றிசைவந்த தேசெனில்பொதி

கையிலகஸ்தியனிருக்கிறானும் - அவனையுங்கண்
டுனது மகிமையுங் கண்டுநா மறியலாமென வந்
ததே... ... ... ... ... ... (௰௨)

மாறுமல்வாய்வேலு மயிலுமெனவே சொல்
ல வாசகங்கைகளெழுத- வருகணக்கொருபுறந்
தீரமற்றொருபுறம் வரைந்திடுமிலக்கமாற- வளை
திரைக்குடசிறிது கல்லணிவகுக்கின்றவன்கணக்
கினிதுபகர- மருவுசொக்கட்டானும் விளையாட
மறைவாக வைத்தசதுரங்கமாடக் - கூறுகவெட்
டெழுத்தாணியெழுதும்படிக் குங்கவிதைபகர
வதில்லார் - கூறெழுத்தாணிசதுரங்க முதுகுப்
புறங்குதிரையடிவெண்பாவரக்-கூறுபுலவோர்ச
பையிலஷ்டாவதானமூல கோர்புகழ்வனடத்
தக் - கோடிலாச்சதுரங்க மாடவய லூரிருக்கு
ஞ்சூது மாட வொருபால் - எறுகிவண்ணப்ர ப
ந்தமெட்டுப்பேர்க்கெழுத்தெழுத்தா வுரைக்க-
இவ்வாறுநற்புறக் கவிதாப்ரசங்கம திசைக்குப்
ர சண்டவாக்கி - இலக்கணவிலக்கியக் கடலைமு
ழுதுங்குடித் தேப்பமிடுகாளமேகம் - இனியக
வியவதானி சரவணப் பெருமாள்கை யெழுது
மொப்பத்திறேலே- சேறுடுசங்குமக்கொங்கை
யார்மடலெழுதிவ்யரவணிகமோகன் - சேது
பதிவாசற்ப்ர தானிமுத்திருளப்பசிங்கவேறெதி
ர்ந்துகாண்க- சித்தபரிபூரணகடாக்ஷவீக்ஷணகு
ண தியாகபரனீயாகையாற் - செந்தமிழ்க்காத

ற்ப்ர பந்தமொன்றுன்மீது செய்துவந் தனமகி
ழ்ந்தே ... ... ... ... .. (௰௫)

நானூறுவண்ணமற் றைஞ்ஞூறுமஞ்சரி நடத்துமறு நூறு தூது- நாலாயிரம்பரணியையாயிரங்கோவை நாடகம்பதினாயிரம் நாற்பத்து நாலாயிரத்துநானூறுபதநாலுலக்ஷங்கொச்சகம் - நாற்பத்திரண்டு லக்ஷந்தாழிசைக ளொருநாழிகை தனிற்பாடுவோன்-தேனூறுமதுரச் செழுந்தமிழ்க்கெல்லைபாய்ச்சித்தாந்தவேதாந்தரஞ் சிதவுசிதசிரோஷ்டசக லாகமபுராதனசிலாக்கிய சௌசன்யாதிகன் - திடசித்தசற்குண சற்சனவரப்ரசாதிப சம்ப்ரதாயதுல்யன்- செய்யநவகண்டமூதண்டவேதண்டவித் தியாடம்பரப்ரசண்டன்- வானூர்பெரும்புகழ தலவிதலசுதல நிதலங்களில்வயங்கு பூசிதன் - மைக்கட் கடற்பொற் புவிக்குட்ப்ர சித்தத் தவக்கொற்றவர்க்குரியவன்-மஹாராஜராஜருந் திறைதருஞ் சேதுபதிவாசற்கவிப்ரசங்கன் - வண்டமிழிலக்கணச் சோமசுந்தரகுரு சுவாமிபடி மைக்கு மடிமை - பானூறுமென்மொழிச் சரவணப்பெருமாள் ப்ரபலகவிருனெழுதுமோலை - பாவைதென்றேவைராமீசனருள்பெறுபராபரராமநாதமுனிவன்-பாதமறவாதவன்ராமனுதேந்த்ரசம் பன்னனெதிர்கொண்டு

காண்கபணிமதிச்சடிலன்மேவிய பணவிடுதூது
பாடிவந்தனமகிழ்ந்தே ... ... ... (௰௪)

அட்டதிசைபணிசெயுஞ் சேதுபதி டணிவாச
லஷ்டாவதானசிங்கம் - அருந்தமிழ்ச் சோமசுந்
தரகுரு சுவாமியடிமைக்கு மடிமைக்கு மடி
மை - அஜாதுநபாபுவை வரச்சொலிக் காகித
மோராள்வசமனுப்பி வைத்தோம் - ஆயிரத்தெ
ட்டடி வரச்சொலிச் சனதுதள வாய்முதலியா
ர்க்குவிட்டோம் - எட்டடிவரச்சொலித் தஞ்சை
ராசர்க்கிலகு திள்ளுசீட்டுக் கொடுத்தோம் - எழ
டிவரச்சொலி மலைராஜனுக் கோலையெழுதியு
த்தரவுசெய்தோம் இனிய பாளையக்காரருக்கெ
லாமொப்பமிட் டெழுது நிருபங் கொடுத்தோ
ம் - இக்கரையுமல்லாம லக்கரையில் யாழ்பாண
மெல்லாங் கிள்ளாக்குவிட்டோம் - கொட்டமிடு
லோபனைப் புத்திவரவன்கவிக் கொறடாவிலுல
டிப்போம் - கூறியகவிக்கர்த்த மறியார்கடலை
யிலே குட்டிப் பயன்சொல்லுவோம் - குற்றஞ்
சொல்வோர்களைச் சோழன்மகனைப்போல சுத்
திச்சினந் தவிர்ப்போம் - கோளர்களை வசைவு
க்கவிதைக்கயிற்றூடு கோத்து தோரணங் கட்டு
வோன் - கட்டிமாணிக்கமுயர் சரவணப்பெருமா
ள் கவிச்சக்ர வர்த்தியோலை - கணபாவை நகர்மே
வுசொக்கலிங்கங் கொடைக் கர்னனெதிர் கொ

ண்டுகொண்ட - கணபதிதருந்திரு முகத்தைமுன்
சொன்னபடி கண்டரங் கேற்றியன்பாய்க் - கன
கமும் பவளமுந்தரளமுங்கோமேதகங்களுந்த
ந்தருள்வையே ... ... ... ... (௰௫)

நீதிபெறு கல்விப்ரதானந் தெளிந்திடு நி
தானஞானப்ரகாசம் - நித்தியசுமங்களக் கவிதா
ப்ரசங்கமன்னேயசுந்தரவிலாசம் - வேதாந்தசா
கரஞ்சித்ராவதானதமிழ் மேகஞ்ச பாரஞ்சிதம்-
வித்வசனசேகரஞ் சேதுபதிவாசலில் விளங்குந
வரத்நதீபம் - ஸ்ரீதரஞ்சோமசுந்தரகுரு சுவாமியி
ருதிருவடி துதிக்குமடிமை சீர்பெறுஞ்சரவண
ப்பெருமாள்கவிசுவரச்செயசிங்கமெழுதுமோ
லை மாதவன் விசயரகுநாதத்துரைத் தொண்டை
மானெதிர் நடத்துகாண்க - வரிசைபெறு து
தொன்றுபாடிவந்தனமுனது மனமகிழ்ந்தருள்
புரிவையே .. ... ... ... ... (௰௬)

மகபதி நராதிபதி நீதிபதி சேதுபதி வாச
ற்ப்ரசண்டவாக்கி- வடிதமிழ்ச்சோமசுந்தரகுரு
சுவாமியடிமைக்குமடிமைக்குமடிமை- பயில்வா
கனக்கடவுளருளினுலுபயசாமரவிருதுகொண்
டதுய்யன் - மலையாளராஜனருள் தந்தபல்லக்கு
வெகுமதிபெற்றசார்வபூமன்- யுகமெலாமகிமை
பெறுதஞ்சைமக ராஜனை யொமேழடியணைத்த
நிபுணன் - உசிதனஜாதநபா விருதையாத் றரு
வரிசை, பொருகைபால வாங்குகவிஞன் - உற்றசி

வகங்கையிற் கவரிவல்லவராஜனுதவுவள நாடுபெ
ற்றோன்-உயரிலங்கைப் பூமிராஜசமுகத்தினிலு
மொருகோடி வரிசைகொண்டோன் - ககனமூ
தண்ட வேதண்ட பிர்மாண்டமுங்கவிபுகழ் ப
டைத்த வரவோன் - காசிமுதலாக ராமேசுரவ
ரைக்குங் கவித்துவச நாடுவிஜயன் - கற்றுச்சொ
லித்தும் வருஸ்தானுபதிக்குமிருகனகதண்டிகை
கொடுத்தோன் - கவிமதக்குஞ்சரஞ் சரவணப்
பெருமாள் கவிச்சக்ரவர்த்தியோலை- புகழ்மேவு
திங்கநகர்வளருங்குமாரவேற்பூபனெதிர்கொண்
டுகாண்க - பொரவராவேங்கைகை பாராததா
துசெம்புக்குளமையாதசாமி - புவியிலிருளா
வேமமேய்ந்துவளராமாடுபொங்கிவேகாதகாண
ம் - பூண்டொடிபடாவத்த மறுபடாவுடலேழ
பொதித்துநீவாழியே... ... ... (௰௭)

செயராமநாதனே தெய்வந் தனுக்கோடி
தீர்த்தமே தீர்த்தமெங்கள் - சேதுபதியேராஜ
னெனவணங் கார்களைச் சிறிவாயைக்கிழித்துச்-
செள்ளைபை நறுக்கிவளர் பல்லையு முடைத்துச்
செழுங்குடலையும் பிடுங்கிச் - சிரசையுமறுத்து
க்ரமுகவிருதுபெறு விஜயசிங்கடாகைப்ரசண்
டன் - நயமதுரமறியாத முழுமடையர் செவி
பென்னு நல்லபாம்புப்புற்றிலே நளினத் திருந்
தமிழ்ச் செந்தேன் குழம்பையொரு நாளுங்கவி

ழ்ந்திடாதோன்- நாவலந்தீவிலுள நாடெலாம்பு
கழ்பெறு நராதிபர்வணங்குதுல்யன்- நாவலர்கு
ழாம்பல துதிக்குமஷ்டாவதான ப்ரபலசார்வபூ
மன்- இபலாயிரங்கோடி பிரபந்தமுழுதுமோ
ரிமைப் பொழுதினிற்பாடுவோன். - இலக்கணச
முத்திரஞ் சோமசுந்தரகுரு வெண்யனடிமைக்
குமடிமை, ஏகசக்ராதிபதி சரவணப்பெருமாள்
கவீசுவரன் செங்கையோலை - இந்த்ரதருயாழ்
ப்பாண மேவியவயத்பலிங்கேந்த்ரனெதிர்கொ
ண்டுகாண்க- வயமானனையிலே மூக்குள்ளதொ
ன்றுதிரு மாயன்பிறப்பிலொன்று-வாற்புறமொ
ர்கொம்பந் தலைப்புறமொர்கொம்புமுளவாகன
ந்தன்னிலொன்று - வலிபார்புரங்களைச் சுடுகின்
றபொருளொன்று, வாரமதுதன்னி லொன்று-
வரவுடன் வெளுத்தசந் திரனென்றுநீயின்று வ
ரிசைதந்தருள்புரிவையே... ... ... (௧அ)

அவதானிசரவணப்பெருமாள் கவீசுரனச்
சென்னபட்டண்முதல் - ஆய்ராமநாதபுரம் வ
ரையுமுள சங்கப் பிராமணர்க் கெலாம் விணப்
பம் - நவமுள துருக்கர்க் கெலாஞ்சலா முதலி
மார் நாய்க்கர்வேளாளர்க் கெலாம் - நன்மை
மேன்மேலு முண்டாகவுங் கம்மாளர் நட்டுவ
ர்களோச்சர்குயவர் - எவரெவரையுந் நினைத்தி
ருந்த நன்மையினுமில் குறையில்லைவள்ளுவர்க

ருக் - கெல்லாஞ்சொலும்படி யெமதுசாமான்
பலவு மிங்கிருந் தெமதுவீட்டுக் குவகையொ
டு முன்னே யனுப்பினோம் பல்லக்கு நாமும் பி
ன்னே வருகிறோம்- ஊட்டதடுக்கிற் பாபசுதடா
மல்விட்டோர்க்கெலாந் தீர்க்காயசே.... (௰௬)

ஷ- சரவணப்பெருமாள்கவிராயர்
குமாரர்பாடியது.

சக்கரவாளத்தக்டு முகடுபடபடெனப்ரசங்க
த்தெழுந்தசிமமம்- தத்வலக்ஷண வித்வலக்ஷண
சுலக்ஷண விசக்ஷண சபாரஞ்சிதம்- சத்தியலோ
கத்து மதலத்தும் விதலத்து நிதலத்துப்ர சி
த்ததுல்யம் - சற்குணலயமினிமை பெறுசுவை
க்கல்வியமு தத்தலங்கார கும்பம்- உக்ரகாடின்
யதிட தடவிகடகடன்மலை யுடைத்தெழு தமி
ழ்க்குஞ்சரம்- உசிதத் துகந்தசித்தாந்தவேதாந்
வுராம வயிராக்கியசித்தம் - உபயபர் வதவடவ
ணாக் கப்புறத்துமுல வப்புகழ் நடத்து வீரம்-
உரககண பணமகுட புவனசக்ரேசுர வுதா ரந
தி குலசிரேஷ்டம் கைக்கடாசலகோடி தருசே
துபதிராஜ கர்த்தன் வரசற்ப்ரசங்கம்- கற்றறியி
லக்கணச் சோமசுந்தரகுரு கடாக்ஷகன காபி
ஷேகம்- கருதுவிரு தவதானி சரவணப்பெரு
மாள் கவீசுவரன் பெற்றரத்நம்- கமலைநாமகள்
வளர் நிதானி யருணசலக் கவிசரப மெழுது
மோலை திக்கெலாந் நிறைகொண்ட கவுரிவல்ல
வராஜ [illegible]

மறு காலிலாத் தும்பிவெந் திட முடை படா
வாரணம் - திக்குணமிலாதகரி பங்கப்படாக்கய
ஞ்செலத்தி லோடாதகளிறு - திருகாத தந்திமு
னை வளையர்தவேழஞ் சிறப்பொடு கொடுத்தரு
ள்வையே... ... ... ... ... ...(௨௰)

தடக்கட லிடப்புவி புரக்குமகுடத்தரச ரிற்
பெரிய சேதுபதிவா - சலிற்கணமகத்துவ மிந்த்
திடு சிதத்துவசனப் ப்ரபலசற்சனபரன் - தரு
ப்பதமடக்கடி கலித்துறை விருத்தம தனப்பச
ரணி கொச்சகமுதல் - தமிழ்க்கடன் மடைப்பு
ன றிறக்குமதெனக்கனி சருக்கரைபொரப் பக
ருவோன் - வடக்கொடு குடக்கொடு கிழக்கொடு
திசைப்புற மணத்திடுபுகழ்ப் ப்ரதாபன் - மட
த்தொடி கொடித்துடி யிடைக்குட முலைச்சிய
ர் மடற்கிடு தொடைக்கு வளையான் - வடித்திடு
மிலக்கண விலக்கிய வகைக்கொரு மலைக்குறு
முனிக்குநிகர்வான் - மனுக்கிளை தழைத்திடு ம
கிழ்ச்சியருணசல மகத்வகவி ராஜனே - கடற்
கரையுடைத்திட விடப்பணி சடைத்தலை கடுப்
பொடு மடிக்கவிருநாற் - கடக்கய முடற்பட ப
டக்கவி ணடர்த்திடு கடிப்புயல் குடற்கிழிபடக்
கடைக்கண லடற்சிகைகதித்தெழ வியற்புவி க
டைக்கடை கிடக்குமலையும் - கடுப்பொடு பொ
டிப்பட வடுத்தவெ ளிடைக்கதிர் கடற்குற ந
டக்கமருவார் - நடப்படை திடுக்கிட வடிக்கிடு
[illegible] - நடக்

து துரை கனிவாடி மலைபாண்டி யப்பைய ந
ரேந்திர னெதிர்ந்துகாண்க- நபப்பரி மதக்கரி
சரப்பணி விரற்பணி நவக்கொலுசு ரத்ந முரு
கு- நகைக்கிடு சிவப்பு வயிரப்பொடி பதக்கமு
நமக்கிவைகொடுத்தருள்வையே ... (௨௧)

(காளமேகப்புலவர்பாடியது.)

தூதஞ்சு நாழிகையி லாறுநா ழிகை தனிற்
சொற்சந்த மாலைசொல்லத்- துகளிலா வந்தாதி
யேழுநா ழிகைதனிற் றொடைபட விரித்துரை
க்கப் - பாதஞ்செய் மடல்கோவை பத்துநா ழி
கைதனிற் பரணியொரு நாண் முழுதுமே பா
ரகாவியமெலா மோரிருதினத்திலே பகரக்கொ
டிக்கட்டினேன்- சீதஞ்செயுந் திங்கண் மரபினு
னீடுபுகழ் செய்யதிருமலைராயன்முன்- சீறுமா
றென்றுமிகு தாறுமாறுகள் சொற் றிருட்டுக்க
விப்புலவரைக்- காதங்கறுத்துச் சவுக்கிட் டடித்
துக் கதுப்பிற் புடைத்துவெற்றிக் - கல்லணையி
னொடுகொடிய கடிவாள மிட்டேறு கவிகாள
மேகநானே ... ... ... ... ... (௨௨)

(படிக்காசுப்புலவர்பாடியது.)

தூளிபடவேவந்த கவிவாணகவி யெலாஞ் சூ
றையிடு கவிராக்ஷசன்- துஷ்டநிஷ்டூரகவி சுப்
ர்தீபக்கவி துறைக்கெலாத் துள்ளு சேட்டு - வா
ளைகுதிபாய்கின்ற வாந்தைகுடிமேவிய மகாஜன
த் தலைவருக்கு- மட்டுலவுசோலைக் களந்தைப் ப

போல வலைபாட யாருமிக் காசினியி லவதரித்
தோம்- காளாக்கர்தோழன்மேற் கவிலை தடிம்மே
லுமுள கவிதையு மறிந்த திலைடா- ஆளனுமிரு
க்கவே செய்தகரு மங்களுக் கழிவுதே டுதலாகு
மோ-ஆகாதகாரியம் போகாது வீணிலே யபகீ
ர்த்தி நிலைநிற்குமே... ... .. .. (உ௩)

விருதுகவி ராஜன் கவிச்சக்ரவர்த்திவாய் வீ
ண்பேசு வார்கண்மிண்டன் - விஞ்சையர்கள் த
ம்பிரான் களந்தைப்படிக்காசு விவரமுட னெ
ழுதுமோலை- பொருதுபிர பந்தமதி லதிகவிற
ல்சேகரன் புகழ்செய்தளவாய் குமாரன் - பூச்
சக்ர மன்னர்பணி ரகுநாதசேதுபதி பூரித்தெ
ழுந்துகாண்க - பரிதிமதியுள்ளளவு நிற்கும் பி
ரபந்தகவி பாடிநின் கீர்த்திகேட்டுப் - பஞ்சல
க்ஷணதமிழ்க் காணிக்கையுங் கொண்டு பரிவாக,
வுனை நாடியே - இருபதின் காதவழி கடலேறிவ
ந்தன னிருந்தமிழ்க் கொள்ளவேண்டி - இந்நே
ரமே நமையிருகாதவழியளவு மெதிர்காணவ
ரல்வேண்டுமே .. ... .... .... ....(உ௪)

(சொக்கநாதப்புலவர்பாடியது)

எண்படா தெதிரிட்ட பாவலர்க்கிடியேறு நா
வலோர் கனகமேரு - இந்திரன் பணிசுந்தரேச
ரருள் சேர் சொக்க நாதனின் றெழுது மோலை-
தின்படாமதிபொருத்த முகபடாந்தொடுகின்றதி
ரிகடா சலேசன் முத்துத் திருவுடைய பூபாலன்

ண்க - கண்படாவத்திரங் கொம்புகொள்ளாதக
லை கழிபடாக் கோடினஞ்சு- காணாத நாகமுட்
டையாத வுடைபண்டு கட்டுப்படாக் கலிங்கம்-
பண்படாக் கோசிக நெய்படாவாடை பலா
கொட்டாத தானைமுதுகு - பட்டிடாத் துசெ
ன்று மட்டிலாவிலையிற் பரிந்துவர விடல்வே
ண்டுமே .. ... ... ... .. . உரு)

(சீகாழி அருணாசலக்கவிராயர்பாடியது.)

எத்திசெயுமேபரவு தக்ஷிணா சலமுனி யெதிர்த்
தடாவலர் குடாரி-இராமாயணக்கவிதைநாடகஞ்
செய்தவ னிலக்கண முணர்ந்தபுலவன் - முத்த
மிழ்க்காழி யருணாசலக்கவிராய முகிலவரவிடுக்
குமோலை முந்துபுகழ் தென்குளத்தூர்முத்து
தாணப்பன் முகமலர்ந்தினிது காண்க - வித்து
வ ஜனங்களுக் காதாரமாகியவர் வேண்டியமெவ
லாமக்கணம்- விரகுடனளித்தனை யெனக்கேட்
டுநாமுமுனை மேவினோங் கவியெழுதினோம் உ
த்தம சிகாமணி நீபாத லாலிவிட முற்றுமெரு
மழைதொடருமுன் ஓராயிரங்கரும்பதுவேண்
டுநீமன துகந்துவர விடல்வேண்டுமே...(உஉ)

கணிகொண்ட பஞ்சலக்ஷண மிராமாயணக்
கடலையு முணர்ந்தபுலவன் - கவிராஜர் புகழ்கி
ன்ற காழியருணாசலக் கவிராய னெழுதுமோ
லை - மணிகொண்ட மார்பன் பிங்கப்பமகிபால
னுண்மகிழ்ந்தசுதன் வணிகாதிபன் - வருசீர்ய

நீதினிதுகாண்க - அணிகொண்ட த்யாகேசர் வி
ண்ணமுறை செய்தது மதற்கு வெகுமதி செய்த
தும் - அதினமக்குபகார நீசெய்ததும் புவியில
றியாத பெருமுளமோ - பணிகொண்ட ராமகிர்
த்தலையுமப்படியே பரிந்துநீகேட்கவேண்டும் -
பாரிலோராயிரம் பிறைகண்டு நீமகிழ் படைத்து
வாழ்ந்திடுகவினிமேத .. .... .... (௨௭)

(மயிலை அருணாசலக்கவிராயர்பாடியது.)

சிற்பரிநிரந்தரி துரந்தரி த்ரியம்பிகை சித
ம்பரி பதம்பணிகுவோர் - சித்தமகலாதபரி சுத்
தபரிபூரணி திருக்குளந் தன்னிலனுகாச் - செ
ங்கண்மால் தங்கையெங்குல தெய்வமாய் வந்த
செல்விசிவ காமவல்லி - திருவடிக் கடிமை திரு
மயிலை யருணா சலன் செங்கையாலெழுதுமோ
லை - மற்புயா சைல னெழில் விற்பன விவேகன்
மட மாதர்மட னாருமாரன் - வளர்கங்கைகுலதி
லகன் மதிபூகிநிறை செல்வவளமைசெறியாற்று
ரினான் - மருமலர்க் குவளையணி மார்பினான் றனை
நம்பி வருபவர்க்கொருசார்பினான் - மங்களாகர
விசயவேங்கடாசலசுமுக வள்ளலெதிர் கொண்
டுகாண்க - சற்பனைக் கார துர்ப்போதனையிலெ
ன்றநம்பி சாலவு மயங்கிநெஞ்சம் - சஞ்சலப்பட்டு
ளந் தடுமாறி வேறுமொரு சார்புமில்லாமலேங்
கித் தளர்வெய்தி வந்தவனை யஞ்சலஞ்சேலென
த் தயவுவைத்தன்றுமுதலாச் - சகலமுந்தந்தினி

ந்தோம்-சொப்பனத்திலுமுனை மறப்பதிலையவ
னையொருதொழிலில் வைத்தாளாக்கிமுன் தொ
ந்தரையை நீக்கிமிக வும்புனித னாக்கியுன் சொ
ல்வழி நடப்பதாக்கிச் - சொலிமையான் றிலலாது
சூழமுதொடாகிலுஞ் சுகமேயிருக்கவைத்துத்-
தொல்லுலகின் மாளாதசெல்வமும் தந்தெனது
துதியுநீ[illegible]வேண்டுமே ... ... (௨௮)

சுப்பிரமணியக் கவிராயர்பாடியது.

மஞ்சரிகலம்பகங் கோவைநூதனமாகமா
லைபல சந்தமாலை, மடலுலாப் பரணிபிள்ளைக்க
விதை முதலா வழுத்தும்ப்ர பந்தமாக்கி-மகுட
முடிமன்னர்சிற கரகம்பிதஞ்செயும் வசனவுசி
தப்ப்ரசங்கன்- வாதுபுரிவிகடகவி மதகரிக்குழா
ங்கடமை வாய்வீறடக்கு சிங்கம் - சஞ்சரிதமுத்
தமிழை யெங்குஞ்செலுத்திவருதாஷ்டீகயான
நிபுணன்- தண்டமிழிலக்கண விலக்கியம தாம்
பெரிய சலதினிலை கண்டவங்கம் தணிகாசலக்கு
மரர் பாதமறவாதன் சரசுவதி நடனசாலை- சரசக
விஷோடசாவதானி சுப்பிரமணியன்தான் மகிழ்
ந்தனுப்புமோலை - கஞ்சமலர்மாலைபூ ந் நூலில
கு தின்புயண் கருவேப்நகராதிபன் - கவிஞர்க
ற்புகழுத் தராபதியனும் விரக்கியாதி பழைம
றைவேதியன்- கானாநிகரானகொடைவீரபூபா
லன்றுள் காதல்சுதனைசு[illegible]ங்கைநதியான
[illegible]

காண்க - விந்தபுவிமீதிலுன் போலரஞ்சிதகு
ண விவேகிவேறில்லையென்றே - விரும்பிவெகு
நாளாக வுனையடுத் தனனெனது வறுமை நீங்கி
டவுமினியோர் வேளைதனிலென்றனவ தானம
து தன்னையென் மீதிலன்பாகமகிழ்வாய் வினவி
யிப் புவியிலுன்பேரிலகவினுமதிமேன்மை
செய்திடல்வேண்டுமே...

## அந்தகக்கவிவீரராகவமுதலி யார்பாடியது.

எட்டாயிரங்கோடி யெழுதாமறன்மனத் தெ
ழுதிப்படித்தவிரகன்- இபசேதுபரியந்த மெ
திரிலக் கவிவீர ராகவன்விடுக்குமோலை சேரா
திபன்சிர மசைத்திடும் புகழ்பெற்றதிரிபதகை
குலசேகரன்- தென்பாலசேலம் புரந்துதாகந்
தீர்த்த செழியனெதிர்கொண்டுகொண்டாடாத
கந்தருவ மெரியாத கந்துகம் பற்றிக்கொளாத
கோணம்- பறவாத கொக்கனற் பண்ணுத கோ
டை வெம்பனையிற்றெருடாதகுந்தம் சூடாதடா
டலம்பூவாதமாவொடுதொடுத்து முடியாதசடில
ம் சொன்னசொற்சொல்லாத கிள்ளையென் றெ
ங்குந் துதிக்கவரவிடல்வேண்டுமே... ...(௧௰)

சீட்டுக்கவிகள் முற்றிற்று.